DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.207/2021

Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. பிராட்டி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.01.2026**

A1 and A2 present.

முதல்விசாரணை:–

நானும் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கட்டாரிமங்கலம் கிராமம், கீழ அம்பலசேரி நாடார் தெருவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கணேசன் எனது கணவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எங்கள் ஊர் சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறார்கள். ஆஜர் எதிரிகளுக்கும், என் கணவருக்கும் என்ன பிரச்சனை என்றால் தண்ணீர் பிரச்சனை என்றுசொன்னார்கள். என் அக்கா மகன் சின்னப்பாதான் மேற்படி விவரத்தை சொன்னார்கள். 02.03.2021 அன்று மாலை 4.30 மணியளவில் சமத்துவபுரத்தில் கிளார்க்கும், சிவபெருமாளும் பைப் லைன் வேலை செய்துகொண்டிருக்கும்போது 1ம் எதிரி ராமனும், என் வீட்டுக்காரரும் சண்டை போட்டதாகவும், எங்கள் ஊர் பஸ்ஸ்டாண்ட் அருகேயுள்ள ஆர்சி சர்ச்க்குள் வைத்து மணித்தேவர் மகன் ராமனும், கிட்டுதேவர் மகன் கண்ணனும் அரிவாளால் என் கணவரை வெட்டிகொலை செய்துவிட்டதாக என் அக்கா மகன் சின்னப்பா சொல்லி கேள்விப்பட்டு பிரேதத்தை சாத்தான்குளம் அரசுமருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் சொன்னதன்பேரில் நானும், என் அக்கா வடிவு அம்மாளும் அங்கு சென்று பார்த்தபோது என் கணவருக்கு உடம்பு முழுவதும் மற்றும் கழுத்து மற்றும் கைகளில் வெட்டுக்காயம் இருந்தது. இதை என் அக்கா மகன் சின்னப்பா நேரில் பார்த்துள்ளான். அவனும், நேரில் பார்த்த கல்லாடபெருமாளும் சாத்தான்குளம் காவல்நிலையம் சென்று புகார்மனு

கொடுத்தார்கள். அந்த புகாரின்பேரில் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் எதிரிகளுக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.207/2021

Prosecution side witness for P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. வெஸ்லி புருஷோத்தமன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.01.2026**

A1 and A2 present.

முதல்விசாரணை:-

நானும் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கட்டாரிமங்கலம் கிராமம், கீழ அம்பலசேரி நாடார் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி கல்லாடன் என்பவரை தெரியும்.03.03.2021 அன்று காலை 7.00 மணிக்கு நான் வேலைக்கு போவதற்காக கீழ அம்பலசேரி ஆர்சி சர்ச் பக்கம் வரும்போது அங்கே சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் அவர்கள் இந்த வழக்கில் கணேசன் என்பவரை வெட்டி கொலை செய்த சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வைமகசர், வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வைமகசரில் நானும், கல்லாடனும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த பார்வைமகசர் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-2** ஆகும். மேலும் அந்த இடத்திலிருந்து சுமார் 8.00 மணியளவில் இரத்தம்பட்ட மண் கொஞ்சம், இரத்தம்படாத மண் கொஞ்சம் ஆகியவற்றை ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், கல்லாடனும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-3** ஆகும். ஆய்வாளர் கைப்பற்றிய பொருட்களை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். அவைகள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தம்பட்ட மண் கொஞ்சம்(**சொத்துப்பட்டியல் வரிசை எண்.1ல் உள்ளது**) அது **அ.சா.பொ.6** ஆகும்., இரத்தம்படாத மண் கொஞ்சம்(**சொத்துப்பட்டியல்**

**வரிசை எண்.2ல் உள்ளது) அது அ.சா.பொ.7** ஆகும். இது சம்மந்தமாக **ஆய்வாளர் அவர்கள் எங்களை விசாரித்தார்கள்.**

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் எதிரிகளுக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.207/2021

Prosecution side witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராமராஜ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.01.2026**

A1 and A2 present.

முதல்விசாரணை:–

நானும் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கட்டாரிமங்கலம் கிராமம், கீழ அம்பலசேரி சிஎஸ்ஐ சர்ச் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பனைத்தொழில் மற்றும் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சாட்சி மூக்கன் என்பவரை தெரியும்.03.03.2021 அன்று ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த மூக்கன் என்பவரும் காவல்நிலையம் சென்றோம். அப்போது அங்கு இரவு 8.30 மணியளவில் எங்கள் இருவர் முன்னிலையிலும் 1ம்எதிரி ராமர் என்பவரை எங்கள் முன்னிலையில் விசாரிக்கும்பொழுது எதிரி ராமர் தானாக முன்வந்து ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் தன்னுடைய விவரத்தையும், கணேசனை தானும், கண்ணனும் சேர்ந்து கொலை செய்ததை சொன்னார். கொலை செய்வதற்கு பயன்படுத்திய அரிவாளை கீழ அம்பலசேரி சுடுகாடு பக்கம் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும், அடையாளம் காட்டி ஒப்படைப்பேன் என்று கூறினார் என்றும், அதை ஆய்வாளர் எங்கள் இருவர் முன்பும் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார் என்றும், அதன்பேரில் மறுநாள் 04.03.2021 அன்று காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை எதிரியையும், எங்களையும் ஆய்வாளர் அழைத்து சென்றார். அங்கே கீழஅம்பலசேரி சுடுகாடு பக்கம் உள்ள முட்புதரிலிருந்து 1ம் எதிரி ராமர் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த வெட்டருவாள் ஒன்றை

ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்துக் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், மூக்கனும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–4** ஆகும். அந்த அரிவாளை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட இயலும். அது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 50 செ.மீ நீளமுள்ள அதில் இரும்பு பாகம் 37 செ.மீ, 13 செ.மீ கைப்பிடியும் உள்ள அரிவாள் அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். எதிரி ராமர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–5** ஆகும். அதில் நானும், மூக்கனும், எதிரியும் கையெழுத்து செய்து கொடுத்தோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் எதிரிகளுக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.207/2021

Prosecution side witness for P.W.8

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முத்துசங்கர் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.01.2026**

A1 and A2 present.

<u>முதல்விசாரணை:-</u>

நானும் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கட்டாரிமங்கலம் கிராமம், கீழ அம்பலசேரி நடுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையில் உள்ள ஜெயசந்திரன் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சாட்சி முருகேசன் என்பவரை தெரியும். 2021 ஆம் வருடம் லீவுக்காக நான் சொந்த ஊருக்கு வந்திருந்தேன். 11.04.2021 அன்று காலையில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த முருகேசன் என்பவர் என்னை தன்னுடன் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு வருமாறு அழைத்தன்பேரில் நானும், முருகேசனும், சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு பல்சர் பைக்கில் வந்தோம். அந்த பைக் கருப்பு சிவப்பு நிறத்தில் உள்ள TN92 C 4362 என்ற பைக்காகும். அந்த பைக்கானது கணேசன் என்பவரை கொலை செய்வதற்காக அந்த பைக்கில் சென்று கொலை செய்ததாக சாட்சி முருகேசன் என்பவர் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் ஒப்படைத்தார். அவ்வாறு ஒப்படைத்ததை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்துக் கைப்பற்றிக்கொண்டார். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ-6** ஆகும். அதில் நானும், முருகேசன் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த பைக்கை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் TN92 C 4362 என்ற பதிவெண்கொண்ட கருப்பு சிவப்பு நிற பல்சர் பைக்கான அ.சா.பொ.5 ஆக

குறியீடு செய்யப்பட்டதுதான். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விாசரித்தார்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் எதிரிகளுக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.
Case No. S.C. No.207/2021
Prosecution side witness for P.W.9

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. இசக்கிதுரை | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.01.2026**
A1 and A2 present.

முதல்விசாரணை:–

நானும் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கட்டாரிமங்கலம் கிராமம், கீழ அம்பலசேரி வடக்குத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சாட்சி வெற்றிசிங் என்பவரை தெரியும். அவர் எங்கள் ஊரில் குடியிருந்து வருகிறார். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கணேசனை தெரியும். 24.03.2021 அன்று நானும், எங்கள் ஊரை சேர்ந்த அன்னபாண்டி மகன் வெற்றிசிங் என்பவரும் மெஞ்ஞானபுரத்திற்கு ஒரு வேலையாக போய்விட்டு வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபோது பன்னம்பாறை பஸ்ஸ்டாப்பில் வைத்து 2ம் எதிரி சுடலைகண்ணன் என்ற கண்ணன் என்பவரை சாத்தான்குளம் ஆய்வாளர் கைது செய்து எங்கள் முன்பு அவர்களை விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவர் சொல்ல சொல்ல ஆய்வாளர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். அதில் தன் விவரங்களை சொல்லிவிட்டு கணேசன் என்பவரை வெட்டி கொலை செய்த விவரத்தை சொன்னார். அதில் கணேசன் என்பவரை வெட்டி கொலை செய்ய பயன்படுத்திய அரிவாளை தன் வீட்டிற்கு பின்புறம் மண்ணில் புதைத்து வைத்திருப்பதாகவும், தன்னை கூட்டி சென்றால் அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அதன்பேரில் அன்றையதினம் சுமார் மதியம் 2.45 முதல் 3.00 மணியளவில் நாங்களும், எதிரியும் 2ம் எதிரி வீட்டிற்கு சென்று அவரது வீட்டிற்கு பின்புறம் எதிரி

அடையாளம் காட்டி தோண்டி எடுத்து ஆஜர் செய்த அரிவாளை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், வெற்றிசிங் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 7** ஆகும். அந்த அரிவாளை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட இயலும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 48 செ.மீ நீளத்தில் 14 செ.மீ கைப்பிடியும், 34 செ.மீ வெட்டும்பகுதி உடைய வெட்டருவாள் ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண். 6ல் உள்ளது) அ.சா.பொ.4 தான். 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 8** ஆகும். அதில் நானும், வெற்றிசிங்கும், எதிரியும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசரித்தார்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் எதிரிகளுக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.